முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

I.P. No. 28/2019

தேதி : 07-10-2025

(ம.சா.1) – திருமதி.கண்ணம்மை

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 5, 6ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**5, 6ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் கோரி வழக்கு செய்துள்ளேன் என்றால் Cheque மோசடி செய்து ஜப்தி செய்த சொத்தை கிரையம் செய்துள்ளார்கள் என்று சொல்லி. செக் மோசடி செய்தது யார் என்றால் செல்லமுத்து, ஆனால் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் பங்குதாரர்களாக உள்ளார்கள். நான் கிருஷ்ணா ஸ்டீல் உரிமையாளர் என்பதை காட்டக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கிருஷ்ணா ஸ்டீல் நிறுவனத்தின் உரிமையாளர் அல்ல என்றும், எனவே தான் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஸ்ரீஅருள்முருகன் ஸ்டீல்ஸ் மற்றும் செராமிக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் கூட்டு பங்குதாரர் என்பதை காட்டக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் பங்குதாரர் அல்ல என்றும், எனவே அவர்கள் எந்தவொரு காசோலை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, 1ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் பேரில் தான் காசோலை கொடுக்கப்பட்டது.

2. காசோலை மோசடி வழக்கு யார் மீது தாக்கல் செய்தேன் என்றால் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் பெயரில். நான் சொல்வது தவறு என்றும் 1ம் எதிர்மனுதாரர் செல்லமுத்து பெயரில் மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் பங்குதாரர்கள். 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை ஏன் மேற்படி வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அதை பற்றி தெரியாது. மாண்பமை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால்

ஆமாம். அ.வ.எண்.190/2019 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை பேரில் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனு எண். 2/2022 என்றால் தெரியாது. செல்லமுத்துவின் சொத்தை மேற்படி வழக்கில் ஜப்தி செய்தேனா என்றால் ஜப்தி செய்தேன். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு ஜப்தி செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நிறைவேற்று மனுவில் 5ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தை தவறான விபரங்களை சொல்லி அது ஜப்தி செய்யப்பட்டு மீண்டும் அந்த ஜப்தி நீக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. 5ம் எதிர்மனுதாரர் மேற்படி நிறைவேற்று மனுவில் தாக்கல் செய்யப்பட்ட ஜப்தி நீக்கறவு மனுவில் 5ம் எதிர்மனுதாரர் வாங்கிய கிரையம் சட்டப்படி சரியானது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம், ஆனால் நாங்கள் வில்லங்கம் போட்டு பார்த்த பின்னர் தான் 5ம் எதிர்மனுதாரர் வாங்கிய கிரையம் பற்றி தெரிய வந்தது. 15.06.2019ம் தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் எங்கள் நிறுவனத்தில் பொருட்கள் வாங்கிக்கொண்டு அதற்கு காசோலை கொடுத்தார் என்பது தான் என்னுடைய வழக்கு என்றால் சரிதான். காசோலை மோசடி வழக்கு 05.09.2019ல் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 5ம் எதிர்மனுதாரர் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களின் சொத்தை 06.06.2019ல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். கிரைய ஆவணத்தை முழுமையாக படித்து பார்த்தேனா என்றால் இல்லை. 5ம் எதிர்மனுதாரர் சரியான மறுபயனை RTGS மூலம் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு கொடுத்துதான் கிரையம் வாங்கியுள்ளார் என்றும், நான்சொல்வது போல் மலரணையாக அல்ல என்றால் சரியல்ல. மேற்படி மாண்பமை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் 5ம் எதிர்மனுதாரர் மீது வேறு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அப்போது தெரியாது.

4. அதேபோல் மேற்படி நீதிமன்றத்தில் 5ம் எதிர்மனுதாரர் மீது எந்தவொரு பரிகாரமும் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, அப்போது புரியாமல் சொல்லிவிட்டேன். மனு சொத்தில் 5ம் எதிர்மனுதாரர் பர்னிச்சர் கடையை வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் கேள்விபட்டேன், ஆனால் அதை 5ம் எதிர்மனுதாரரா அல்லது 1ம் எதிர்மனுதாரர் விட்டுள்ளாரா என்று தெரியாது. 1 முதல் 4ம் எதிர்மனதாரர்கள் மனு சொத்தை வங்கியில் அடமானம் வைத்து கடன்

வாங்கியுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் பார்த்த வில்லங்க சான்றில் மேற்படி அடமானம் துலங்கிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த ஆவணத்திலேயே மேற்படி விபரம் துலங்கும் என்றும், தற்போது வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேறப்டி அடமானம் ஏலத்திற்கு வரும் நிலையில் இருந்தபோது 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் 5ம் எதிர்மனுதாரரை மனு சொத்தை கிரையம் செய்வதற்கு அணுகினார்கள் என்றும், எனவே 5ம் எதிர்மனுதாரர் வங்கியில் அந்த தொகையை செலுத்தி சரியான மறுபயன் கொடுத்து மனு சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் தெரியாது.

5. வில்லங்க சான்றில் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு வங்கி கடனை தவிர வேறு எந்த வில்லங்கம் இல்லாத காரணத்தினால் தான் 5ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. 5ம் எதிர்மனுதாரர் சந்தை மதிப்பு போக மேற்படி அடமான தொகையான ரூ. 1.25 கோடியை செலுத்தியும் மீதத்தொகையையும் கொடுத்து கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. எதனடிப்படையில் 5ம் எதிர்மனுதாரர் மலரணையாக கிரையம் வாங்கியுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் 1ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு கொடுக்கவேண்டிய தொகைக்காக அவருடைய சொத்தை கிரையம் செய்ததால் அவ்வாறு சொல்கிறேன். 1ம் எதிர்மனுதாரர் செல்லமுத்து என் மீது ஒட்டன்சத்திரம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் தெரியாது. அவ்வழக்கில் நான் ஆஜராகவில்லை. 5ம் எதிர்மனுதாரர் சரியான மறுபயன் கொடுத்து சொத்தை கிரையம் பெற்று அவர் பெயரில் வருவாய் ஆவணங்களை பெற்று தற்போது வரை அவர்தான் அனுபவித்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மனு சொத்தை பொறுத்து 5, 6ம் எதிர்மனுதாரர்கள் சட்டப்படி உரிமையாளர்கள் என்றும், அதை பொறுத்து நான் ஆட்சேபணை செய்யமுடியாது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.